

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்கு பகுதி, 36 (அ) வட்ட தி.மு.க. சார்பில் திராவிட சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டு மகளிருக்கான மாபெரும் கோலப் போட்டி, ஆண்கள், பெண்கள் உரியடிக்கும் போட்டி, ஆண்கள், பெண்கள் கயிறு இழுக்கும் போட்டி, சிறுவர், சிறுமியருக்கான ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட விளையாட்டு போட்டிகள் வட்டக் கழகச் செயலாளர் க.பாபு தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர் க.ஜெயராமன், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், எஸ்.சாக்ரடீஸ் ஆகியோர் முன்னிலையில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். இதில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் அத்திப்பட்டு ஊராட்சியில் திராவிட சமத்துவ பொங்கல் தமிழர் திருநாள் விழா ஒன்றியகழகச்செயலாளர்ஏ.ஆர்.டி.உதயசூரியன் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கலந்துகொண்டு சமத்துவ பொங்கல் தொடங்கி வைத்து மகளிர்களுக்கான கோலப்போட்டியினை பார்வையிட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார் நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் மு.பகலவன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆ.ராஜா, வே.ஆனந்தகுமார், முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து.தமிழரசன், முன்னாள் ஊராட்சி மன்ற துணை தலைவர் எம்.டி.ஜி. கதிர்வேல் உள்பட கழக நிர்வாகிகள்பலர் கலந்து கொண்டனர்

தா.இளைய அருணா ஏற்பாட்டில் – ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. – ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. – ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# இராயபுரத்தில் திராவிடப் பொங்கல் விழா - நலத்திட்ட உதவிகள்!

## ஆர்.எஸ்.பாரதி – அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினர்!

சென்னை, ஜன.12-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் அறிவகத்தில் கழக குடும்பங்களுக்கு புத்தாடைகள் பொங்கல் பொருள்களை தலைமை செயற்குழு உறுப்பினர் தா.இளைய அருணா தலைமையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இந்து சமய அறநிலை துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., மாவட்ட நிர்வாகிகள் இரா.வெற்றி வீரன், மு. கோபி எஸ் ஆர் கமலக்கண்ணன் க. நாகம்மை வி தயாளன் பகுதி செயலாளர் இரா செந்தில் வ. பெ.சுரேஷ் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ந. மனோகரன் இரா கருணா மாநில நிர்வாகிகள் பி.டி. பாண்டி செல்வம் பொதுக்குழு உறுப்பினர்கள் நா சண்முகம் வே சிவக்குமார் கி.ராஜேந்திரன் பகுதி நிர்வாகிகள் த, ஜெயபால் பி.சேகர் கு.சுந்தர் லோ மோகன் ஜெயலட்சுமி எம் கே இஸ்மாயில் கு.ரமேஷ் சு. திருஞானம் லோ மோகன் ஜெயலட்சுமி மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் லியோ டி.சுரேஷ் க.கார்த்திக் செங்குட்டுவன் லட்சுமி வேலு

பி.சோமசுந்தரமூர்த்தி வட்டச் செயலாளர்கள் இரா பாலன் எம் ரவி க. கலைச்செல்வன் சதீஷ்குமார் என் கிருஷ்ணன் கோவிந்தராஜ் பி. கண்ணன் கொரியர் பி முருகன் எஸ் புகழேந்தி பாலாலட்சுமணன் ஜே கௌரிஸ்வரன், எஸ்.குமரன், தீ.சரவணமூர்த்தி, எஸ்.கே.லாட்கடை செந்தில் சுவிஸ் ஆர்.இளையராஜா, ஏ. ஆனந்தன் ஜி எஸ் முருகன் M. Md. சலாவுதீன் த.ரவி டில்லி பாபு மெடிக்கல் சதீஷ் முணா சந்திரன் கே.முனுசாமி, பகுதி அமைப்பாள்கள் துணை அமைப்பாளர்கள் சாந்தகுமார் அப்துல் மாலிக் இரா நரேஷ் குமார் சி.தமிழ் தென்றல் வி.கலைவாணி ஒருங்கிணைப்பாளர்கள் Ad.தரணி டி. வி.எஸ்.தங்கராஜ் எம் எம் செந்தில் குமாரா ஆர்.பி.சேகர், ஜி.அண்ணாதுரை, ஜி.தனசேகர் ஜி.வேலுமணி லியாகத் பாட்ஷா புக் ஸ்டால் கண்ணன் எம் செல்வம் Ad. சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர் .

ஆர்.வி. கணேஷ் நன்றி உரையாற்றினார்.

எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஏற்பாடு! மாஸ் டி.வெங்கடேசன் தலைமை! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# ஆர்.கே.நகர் மேற்குப் பகுதியில் சமத்துவ பொங்கல் விழா!

## ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைக்கிறார்! ஆர்.டி.சேகர் - கலாநிதிவீராசாமி பங்கேற்பு!

சென்னை, ஜன.12

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி சார்பில் சமத்துவ பொங்கல் விழா கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (12.01.2026 திங்கட்கிழமை) மாலை 5.00 மணியளவில் நேதாஜி நகர் நாடார் உறவின் முறை திருமண மண்டபம் நேதாஜி நகர், தண்டையார்பேட்டை செ81ல் நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாஸ் டி.வெங்கடேசன் தலைமை வகிக்கிறார்.

ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார். எம்.லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.சீனிவாசன், நேதாஜி யு.கணேசன் எம்.சி, எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.எ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, எம்.பி.ஆர்.ராஜன், ஏ. மணிமேகலை எம்.சி, ஜி.ராஜா, மீஞ்சூர் முகுந்தன், கே.கோதண்டம், டி.சங்கர், கே.ஜானகிராமன், எஸ்.ஜான்கென்னடி, ஏ.தனசேகர், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி கழக நிர்வாகி களுக்கு புத்தாடைகள் பொங்கல் பரிசு வழங்குகிறார். மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

கே.வி.லோகேஷ், இரா.லட்சுமணன், என்.மருதுகணேஷ், இரா.வெற்றிவீரன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, சே.ஜோதி, ஏ.டி.மணி, டாக்டர் கலைவாணன், எஸ்.எம்.பரசுராமன், எம்.விமலா, அ.மோகன், இர. பொன்இளவரசன், இ.ரவிக்குமார், வெ.கார்த்திக், கே.காளிதாஸ், என்.ராஜ், எஸ்.வி.ரவி, ஓ.இ.அழகானந்தம், எஸ்.பாஸ்கர், கே.ரேணுகா, சி.எம்.டேனியல், க.முருகன், எம்.பி.கிளைமென்ட்ராஜ், ம.மதன்குமார், எஸ்.எம்.அப்துல்ரகுமான், எஸ்.பொன்ராஜ், எஸ்.சரவணகுமார், எஸ்.ராஜசேகர், பி.முருகன்,

கு.யுவராஜ், ஏ.கே.பால்சாமி, மெ.ரசூல்மொய்தீன், டி.கே.ரத்தினகுமார், கே.யுவராஜ், ஆ.கோவிந்தராஜ், எம். சுசிலா, எம்.கே.ரங்கநாதன், எம்.ஆர்.பி.பழனி, என்பீல்டு துரைராஜ், எஸ்.சுப்ரமணி, எஸ்.பாஸ்கர், பி.விஜயா, எஸ். தமிழரசன், வி.மூர்த்தி, என். பி.அஜித், என்.சுப்புராயன், பி.கணேஷ்குமார், டி.தேவேந்திரன், வி.ரஜினிகாந்த், எஸ். சரவணன், டி.விமல்ராஜ், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

மு.கோவிந்தராஜ் நன்றி கூறுகிறார்.

பூ.நவராஜ் தலைமை! ச.சங்கர் கணேஸ் எம்.சி. முன்னிலையில்

# மதுரவாயல் வடக்குப் பகுதியில் இளைஞர் அணி சமூக வலைதள பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. – நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு!

சென்னை. ஜன.12-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதியில் வட்டங்கள் வாரியாக இளைஞரணி சமூக வலைதள பயிற்சி பாசறை கூட்டம் நடைபெறுகிறது.

கூட்டங்கள் நடைபெறும் விபரம் வருமாறு;

இன்று (12.01.2026) மாலை 5.00 மணி 92வது வட்டம், வெல்கம் பேலஸ், முகப்பேர்

91வது வட்டம் மற்றும் 143வது வட்டம், மாலை 6.00 மணி, பகுதி அலுவலகம்.

144வது வட்டம் மற்றும் 145வது வட்டம், மாலை 7.00 மணி, மினி மஹால்

146வது வட்டம் மற்றும் 147வது வட்டம், மாலை 8.00 மணி, வட்டச் செயலாளர் அலுவலகம்

என தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், விருகை சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, பகுதி கழக செயலாளர், மண்டலக்குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், 151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஸ்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் செ. ரவி மற்றும் சமூக வலைதள மாவட்ட துணை அமைப்பாளர் வி. சண்முகநாதன் ஆகியோர் ஆலோசனை வழங்க உள்ளதால் இந்நிகழ்விற்கு மேற்குறிப்பிட்ட வட்டத்திற்கு உட்பட்ட இடங்களில் நடைபெறும் நிகழ்வில் வட்ட கழக செயலாளர்கள், இளைஞரணி பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமை! நந்தனம் கி.மதி எம்.சி முன்னிலை!

# 121 (அ) வட்டத்தில் கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, ஜன. 12-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121 அ வட்ட கழகத்தில் திராவிட பொங்கல் விழா இன்று (12.01.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் வட்ட கழகத்திற்கு உட்பட்ட ரங்கா திருமண மண்டபத்தில், வட்ட கழகச் செயலாளர் சீ கிருஷ்ணமூர்த்தி தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121 வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி மதி எம் சி, முன்னிலையில் நடைபெறும் திராவிட பொங்கல் விழாவில், மாவட்ட கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மயிலை த வேலு எம் எல் ஏ அவர்கள், வட்ட கழகத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள் அனைவருக்கும், திராவிட பொங்கல் விழா பரிசு பொருட்களை வழங்குகிறார்.

இவ்விழாவில் வட்டக் கழகத்திற்குட்பட்ட, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக அணிகளின் நிர்வாகிகள், BLA2 / BLC நிர்வாகிகள், வட்ட கழக முன்னோடிகள், உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க உள்ளனர்.




மதுரவாயல் தெற்கு பகுதி 148 வது வட்டத்தில் பகுதி துணை அமைப்பாளர் ஆர்.தியாகராஜன் ஏற்பாட்டில் தெருமுனை கூட்டம் தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் காரம்பாக்கம் க.கணபதிஎம். எல்.ஏ,தொகுதி தேர்தல் பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் வட்ட கழக செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் செ.ரவி, பகுதி அமைப்பாளர் நரேன்கணபதி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் பகுதி வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சனா சுதாகர் தலைமையில் ஜி.ஆர்.திருமலை முன்னிலையில்

# பூவிருந்தவல்லி நகரம் 18வது வார்டில் பொங்கல் விழா!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்து பொங்கல் பரிசுகள் வழங்கினார்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர், ஜன.12

மத ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக இந்து, முஸ்லிம், கிறித்தவ பெண்கள் பங்கேற்ற சமத்துவ பொங்கல் விழா திருவள்ளூர் மத்திய மாவட்ட . பூந்தமல்லி நகராட்சிக்கு உட்பட்ட 18 வது வார்டு பகுதியில் நடைபெற்றது இதில் நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் தலைமை தாங்கினார் நகரக் கழகச் செயலாளர் ஜி. ஆர்.திருமலை முன்னிலை வகித்தார் மாவட்ட பிரதிநிதி ஜெ.சுதாகர் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தார்.

நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சமத்துவ பொங்கலை துவக்கி வைத்து மகளிர் குழு பெண்கள் பங்கேற்ற கோலப்போட்டி, உறியடிக்கும் போட்டி, இசை நாற்காலி, போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் விதமாகவும், இயற்கைக்கும், சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாகவும் பொங்கல் வைத்து வழிபட்டதை இந்து, கிறிஸ்துவ, முஸ்லிம் உள்ளிட்ட மதங்களைச் சேர்ந்த பெண்கள் மத ஒற்றுமையை வலியுறுத்தி இணைந்து பொங்கலிட்டதை பார்வையிட்டார்.

இதனை தொடர்ந்து திமுக நிர்வாகிகள், தூய்மை பணியாளர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த பெண்கள், பொது மக்கள் உள்ளிட்ட ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு பொங்கல் பரிசு தொகுப்புகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

பின்னர் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதையடுத்து அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

இந்த விழாவில் மாநில சிறுபான்மையினர் இணைச்செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணைச் செயலாளர் காயத்திரி ஸ்ரீதர், தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், நகர மன்ற துணைத் தலைவர் க.ஸ்ரீதர், நகர நிர்வாகிகள் தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர்மன்னன், அசோக்குமார், புண்ணியகோட்டி, அன்பழகன், சௌந்தர்ராஜன் விமல் ஆனந்த், ராஷிக், 18 வது வார்டு நிர்வாகிகள் மற்றும் முன்னோடிகள் பூவை ஜீவா, மகாலிங்கம், சேகர், மோகன், முஸ்தாக், ரபீக், ஆனந்த், சலீம், யுவராஜ், ஏழுமலை, சூர்யா, பழனி, கிருஷ்ணன், ராஜேஷ் மற்றும் திமுக நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கழகத் தோழர்கள்

# 1500 பேருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜன.12-

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் எழும்பூர், ஆல்பர்ட் திரையரங்கம் அருகிலுள்ள பியாஸ் மஹாலில் பொங்கல் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கழக உடன்பிறப்புகள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளிட்ட 1,500 கழகத்தினருக்கு பச்சரிசி, வெல்லம், நெய், ஏலக்காய், முந்திரி, திராட்சை, காலண்டர் மற்றும் புடவை, வேட்டி, சட்டை உள்ளிட்ட பொங்கல் பரிசுப் பொருள் தொகுப்பைச் சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன் வழங்கினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, கமலக்கண்ணன்; எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல், 108-வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 77-வது வட்டத் துணைச் செயலாளர் வீ.கே.ரவி, 77 ‘அ’ வட்டத் துணைச் செயலாளர் ஆர். ஆரோக்கியம், அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாறன்;

108 ‘அ’ வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி, 99 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.குணா, 108-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ் குமார், 58-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வே.பா.ரோஹித்குமார், 58 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தி.ராஜ் குமார், 77-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சதிஷ்,

78-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.வேலன், 108 ‘அ’ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சூர்யா, 77-வது வட்டப் பகுதி பிரதிநிதிகள் முனுசாமி, மணிவண்ணன், 77-வது வட்டப் பொருளாளர் வெங்கட், தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், பிரம்ம தேவன், பாக முகவர் கவிதா, அசினா பேகம், சரவணன், எஸ்.கண்ணன், வேலு, பாபு, அனிஷ், விஷால், சத்யகலா, ரோஷன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.

கே.ஏழுமலை தலைமை! மயிலை த.வேலு – ஜெ.கருணாநிதி, கோ.சு.மணி – ரத்னா லோகேஸ்வரன் பங்கேற்பு!

# தியாகராய நகர் 133, 133 (அ) வட்டத்தில் திராவிட பொங்கல் பரிசுகள் வழங்கும் விழா!

## வட்டக் கழக செயலாளர்கள் பி.மாரி - பி.ஜெயகுமார் அறிக்கை!

சென்னை, ஜன.12-

தியாகராய நகர் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் 133, 133 (அ) வட்டத்தில் கழகத் தோழர்களுக்கு திராவிட பொங்கல் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (12.01.2026 - திங்கட்கிழமை) மாலை 6.00 மணிக்கு பாண்டி பஜார் உள்ள சர்.பிட்டி தியாகராயர் கலையரங்கத்தில் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. தலைமையில் வட்ட கழக செயலாளர்கள் பி.ஜெயக்குமார், பி.மாரி பகுதி துணை செயலாளர் பாபா சுரேஷ் ஆகியோர் முன்னிலையில்

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ., தியாகராய நகர் கிழக்கு பகுதி செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு மணி ,தொகுதி பார்வையாளர் திருமதி ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு பொங்கல் பரிசுகள் வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு 133, 133 (அ) வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், பாக பொறுப்பாளர்கள், பாகம் உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி சுற்றுச்சூழல் அணி, ஆதிதிராவிட நல குழு, சிறுபான்மையினர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, பொறியாளர் அணி தொழிலாளர் அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை ஆகிய அணிகளின் சார்ந்த மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர் என்பதனை வட்டக் கழக செயலாளர் பி.மாரி, பி.ஜெயக்குமார் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

டி.ராஜவேலு தலைமை! நந்தனம் கி.மதி முன்னிலை!

# 121 வது வட்டக் கழகம் சார்பில் கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு வழங்குகிறார்!

சென்னை, ஜன. 12-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 121 வது வட்டக் கழகத்தின் சார்பில் திராவிட பொங்கலை முன்னிட்டு (12.1.2026) திங்கட்கிழமை மாலை 6 மணி அளவில் இராயப்பேட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஆஞ்சநேயர் கோவில் தேவஸ்தானம் பின்புறம் உள்ள ராம் மந்திர் மஹாலில் 121வது வட்டக் கழக நிர்வாகிகள் பாக பொறுப்பாளர்கள் பாக முகவர்கள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் புத்தாடை மற்றும் பொங்கல் பரிசு வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மயிலை மேற்கு பகுதி செயலாளரும் 121 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான நந்தனம் கி. மதி முன்னிலையில் சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு இவ்விழாவில் கலந்துகொண்டு அனைவருக்கும் தைப்புத்தாண்டு மற்றும் பொங்கல் பரிசுகள் வழங்குகிறார்.

ஆகவே இந்நிகழ்ச்சியில் 121 வது வட்டக் கழக நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், பாக உறுப்பினர்கள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 121 வது வட்ட செயலாளர் டி.ராஜவேலு கேட்டுக் கொண்டுள்ளார்.




தாம்பரம் தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் 5,000 ற்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கு பொங்கல் திருநாளை முன்னிட்டு பொங்கல் பரிசை மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., வழங்கினர். பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் தலைமையில் மேயர் க.வசந்தகுமாரி மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகளும் கழக முன்னோடிகளும் பெரும் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.